13.03.2023
O.S.No.306/2014

வா.சா.1 திரு.விஜயபாண்டியன் த.பெ.முனிமாணிக்கம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** தாவா சொத்தை பொறுத்து பட்டா சம்பந்தமான வழக்கு தாசில்தார் அலுவலகத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது முதல்வர் சண்முகராஜ் என்ன பதில் தாக்கல் செய்திருந்தார், எதிர் தரப்பினர்கள் என்ன பதில் தாக்கல் செய்திருந்தார்கள், என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சண்முகராஜ் எந்த பதிலும் அந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பட்டாமாறுதல் உத்தரவு எதுவும் எனது முதல்வர் சண்முகராஜுக்கு சார்வு செய்யப்படவில்லை. தாவா சொத்து 1 ஏக்கர் 63 சென்டு விஸ்தீரணம் உடையது என்று சொத்து விவரத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்து விவரத்தில் தாவாசொத்திற்கு நான்கு எல்லைகளோ யூடிஆருக்கு முன்பு உள்ள ரீசர்வே-க்கு முன்பு உள்ள பழைய சர்வே எண் எதுவும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ-4 கிரய ஆவணத்திலும் ரீசர்வேக்கு முன்பு பழைய சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2.எனது முதல்வர் சண்முகராஜுக்கு கிரயம் கொடுத்த தனராமனுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பவர் பத்திரத்திலும் ரீசர்வேக்கு முன்பு உள்ள பழைய சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே போல் எனதுபிராது, வா.சா.ஆ-4 கிரய ஆவணம் மற்றும் தனராமனுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பவர் பத்திரத்தில் தாவா சொத்தின் நான்கு எல்லைகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை, ஆனால் ஸதலத்தில் நேரடியாக நான்கு எல்லைகள் காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்து எனது முதல்வர் சண்முகராஜ் கிரயம் வாங்கும் முன்பு அதன் நான்கு எல்லைகள் அவருக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து எனது முதல்வர் சண்முகராஜ் கிரயம் வாங்கும் முன்பு அவரது கிரயதாரருக்கு வா-சா.ஆ.2 பாகபிரிவினை ஆவணம் மூலம் பிசெட்டியூல் சொத்தாக ஒதுக்கப்பட்டிருந்ததாக தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ-2ன் அசல் ஆவணத்தில் தாவா சொத்து எந்த செட்டியூலில் இருக்கிறது என்றால் தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள சர்வே எண் எதுவும் வா.சா.ஆ-2 பாகபிரிவினை ஆவணம் பி செட்டியூலில் இல்லை.

3. எனது கூடுதல் பதிலுரையிலும் எனது முந்தைய குறுக்கு விசாரணையிலும் தாவா சொத்திற்குரிய பழைய சர்வே எண்.239/1 என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான், அந்த சர்வே எண்.239/1 என்பது வா.சா.ஆ-2 பாகபிரிவினை ஆணத்தில் பி செட்டியூல் சொத்தில் 5வது இலக்க சொத்தாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.239/1ல் 1ஏக்கர் 64 சென்டில் வடபுறம் 1 ஏக்கர் மட்டும் என்று வா.சா.ஆ-2 ஆவணத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ-2 ஆவணப்படி எனது முதல்வர் சண்முகராஜுக்கு கிரயம் கொடுத்த சுந்தரசாமி கவுண்டருக்கு சர்வே எண்.239/1ல் 1 ஏக்கர் மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால் அந்த பாகபிரிவினை ஆவணம் உண்மையானது என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை எனது முதல்வர் 11.04.1960 தேதியிட்ட வா.சா.ஆ-2 பாகபிரிவினை பத்திரப்படி தான் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் அந்த கிரய ஆவணத்தை பார்க்காமல் தான் எனது முதல்வர் கிரயம் வாங்கினார். தாவாசொத்தை பொறுத்து பட்டா வழங்குவது தொடர்பான வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவில் எனது முதல்வரின் கிரயதாரர்கள் சுந்தரசாமி கவுண்டர் சர்வே எண்.239/1 ல் தனக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கரில் 77 சென்டு நிலத்தை பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் அது தவறான சங்கதி. அதே போல் மீதமுள்ள 33 சென்டு நிலத்தை கஸ்தூரி அம்மாளுக்கு கிரயம் கொடுத்து விட்டதாக அந்த உத்தரவில் காணப்படுகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை கிரயம் வாங்கும் முன்பு எனது முதல்வர் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தாரா என்றால் வாங்கி பார்த்தார். அந்த வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த வில்லங்க சான்றிதழை இந்த வழக்கு பிரதிவாதி தொடர்புடைய மற்றொரு வழக்கு அசல் வழக்கு எண்.52/2014 வழக்கில் தாக்கல் செய்துவிட்டதால் இந்த வழக்கில் அந்த வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யமுடியவில்லை.

5. அந்த வழக்கில் தாக்கல் செய்ததாக சொல்லப்படுவதால் அதை நீதிமன்ற நகல் எடுத்து இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.52/2014 வழக்கில் நான் கூறுவது போல் வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்யாததால் தான் அதன் நீதிமன்ற நகலை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பட்டா தற்போது வரை இந்த வழக்கின் பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. எனது நிருபண வாக்குமூலத்திலும், கூடுதல் பதிலுரையிலும் தாவா சொத்தை பொறுத்து எதிரிடை சுவாதீனம் அடிப்படையிலும் எங்களுக்கு கிடைக்கதக்கது என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் நீண்ட அனுபவத்தை காண்பிப்பதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா மாறுதல் உத்தரவிற்கு பின்பாவது எனது முதல்வர் தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்த விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் பட்டா மாறுதல் விவரமே எனது முதல்வருக்கு தெரியாது.

6. தாவா சொத்தை பொறுத்து சுந்தரசாமி கவுண்டர் பிரதிவாதிகளுக்கு 77 சென்டு நிலமும் கஸ்தூரி அம்மாளுக்கு 33 சென்டு நிலமும் விற்பனை செய்துவிட்டார் என்று பிரதிவாதிகள் தங்களது எதிர் உரையில் சொல்லி உள்ள பின்பு மேற்படி கிரய ஆவணங்கள் செல்லாது என கோரி நான் விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். அதே போல் சுந்தர கவுண்டர் வாரிசுதாரர்கள் யாரும் மேற்படி 2 கிரயங்களும் செல்லாது என கூறி இதுவரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கஸ்தூரி அம்மாளை நாங்கள் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர் யார் என்றே தெரியாது என்பதால் இந்த வழக்கில் அவரை சேர்க்கவில்லை. (பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).